## *20*

# கடைசி நாள்

## *மத். 26:45-27:66 மற்றும் இணை வசனப்பகுதிகள்*

***அறிமுகம்.***—கிறிஸ்துவின் மரணத்தை, அவருடைய வாழ்வின் இழப்பில் நாம் மிகைப்படுத்துவதாக சில வேளைகளில் உணரப்படுகின்றது. அது சாத்தியமானதாகவே உள்ளது. சிலுவை என்பது பிதாவின் அன்பு மற்றும் இயேசுவின் வாழ்வு ஆகியவற்றின் உச்சகட்டத்தன்மை என்று ஏற்படுத்துவதைத் தவற விடுகின்ற ஒரு கடினமான இயந்திரத்தனமான வழிமுறையில் நிலைத்து இருந்து விடக்கூடிய சாத்தியக் கூறு உள்ளது. இருப்பினும், வேதாகமத்தில் வேறெந்த நாளின் செயல்களும் இதற்குச் சமமான முழுமைத்தன்மையுடன் எடுத்துரைக்கப்படுவதில்லை என்பது ஆலோசனைக்குரிய உண்மையாக உள்ளது. இயேசுவின் முழு வாழ்வும் இவ்வாறு முழுமையாக எடுத்துரைக்கப்பட்டால், அது முழுப் புதிய ஏற்பாட்டைப் போன்று நானூறு தொகுதிகளை நிரப்பி விடும்.

***1. காட்டிக் கொடுத்தல்.***—இயேசு ஜெபித்துக் கொண்டிருக்கையில் மூன்று சீஷர்களும் உறங்கியிருந்தார்கள். (ஆனால்) யூதாஸ் அவ்வாறு உறங்கவில்லை. அவன் தனது திட்டங்களை முழுமைப்படுத்துவதில் மும்முரமாய் இருந்தான். இயேசு தமது வேண்டுதல்களிலிருந்து எழுந்து, சீஷர்களிடத்தில் திரும்புகையில், யூதாஸ் ஆயுதங்களும் தீப்பந்தங்களும் தரித்திருந்த போர் வீரர்களின் ஒரு குழுவுடன் தோட்டத்திற்குள் நுழைந்தான். இந்த மனிதர்கள் இயேசுவை யார் என்று அறியாதிருந்தார்கள்; ஆனால் இதில் தவறுதல் ஏதேனும் ஏற்பட்டு விடாமல் இருக்க யூதாஸ் ஒரு சைகை கொடுத்திருந்தான்; அவன் இயேசுவிடம் நேராகச் சென்று "ரபீ, வாழ்க"[1] என்று கூறி அவரை முத்தமிட்டான். கலிலேயாவைச் சேர்ந்த புகழ் மிக்க அந்தத் தீர்க்கதரிசியின் காட்சியைக் கண்ட அந்த கூலியாட்கள் (போர்ச் சேவகர்கள்) பயமடைந்து முதலில் பின்னால் தடுமாறி விழுந்தார்கள்; ஆனால் கடைசியில் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அவர்கள் இயேசுவைப் பிடித்தார்கள், மற்றும் அவரைக் கட்டி, வெளியே நடத்தி வந்தார்கள். இது யாவும் பேதுருவால் சகிக்கக் கூடாததாயிருந்தது, மற்றும் அவருடைய பட்டயத்திலிருந்து மோசமாய்ச் செலுத்தப்பட்ட வீச்சு ஒன்று பிரதான ஆசாரியரின் வேலைக்காரனுடைய காதை வெட்டியது. ஆனால் நண்பர்களாயிருப்பினும், பகைவர்களாயிருப்பினும் பட்டயங்கள் என்பவை ஒன்று போலவே தேவையற்றவைகளாயும் பயனற்றவைகளாயும் இருந்தன. அவர் தமது கட்டளைகளின் கீழ் இருந்த வல்லமையைப் பயன்படுத்த விரும்பியிருந்தால், அவருடைய விரோதிகள் அவற்றிற்

கெதிராய் நிலைநின்றிருக்க முடியாது; மற்றும் அவருடைய சுயமான தீர்மானமுள்ள நோக்கம் மற்றும் யூதரின் வெறுப்பு ஆகியவற்றிற்கு எதிராக அவர் சார்பாக அவருடைய நண்பர்கள் (கூட) அனுகூலமான ஏதொன்றை யும் செய்திருக்க முடியாது. தெய்வீக அன்பும், மிகக் கொடூரமான வெறுப்பும், தேவனுடைய மேன்மைமிக்க நோக்கங்களும், மனிதர் களுடைய அற்பத்தனமான நோக்கங்களும், சிலுவையைச் சுற்றிலும் சந்திக்கின்றன, ஒன்று கலக்கின்றன.

***2. விசாரணைகள்.***—ரோமர்கள் தாங்கள் வெற்றி கொண்ட எல்லா மக்களையும் விட்டு விட்டிருந்தது போலவே யூதர்களையும் பெரிய அளவில் சுயாதீனமுள்ளவர்களாயிருக்கும்படி விட்டு விட்டிருந்தார்கள். யூதர்கள் அமைதி காத்திருந்து, வரிகளைச் செலுத்திக் கொண்டிருந்த மட்டிலும் அவர்கள் தங்கள் உள்ளூர் விவகாரங்களைத் தங்கள் சொந்த வழியிலேயே கையாண்டு கொள்ள முடிந்திருந்தது. ஆனால் அவர்களின் நாட்டுக் குழுவானது (ஆலோசனை சங்கத்தார்) கைதி ஒருவரை மரணத்திற்குப் பாத்திரராகத் தீர்ப்பிட்டிருக்கையில், மரண தண்டனை விதித்தல் என்பது ரோமானிய நீதிமன்றத்திற்கு மாத்திரம் உரிய பணியாய் இருந்தது. இவ்விதமாக இயேசு தனிக்குறிப்பிட்ட இரு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டார்: யூதத்துவ அல்லது போதகத்துவ விசாரணை மற்றும் ரோமானிய அல்லது குடிமைத்துவ விசாரணை. ஒவ்வொரு விசாரணை யிலும் பின்வரும் மூன்று நிலைகள் இருந்தன.

*அ. யூதத்துவ அல்லது போதகத்துவ விசாரணை.*—(1) அன்னாவின் முன்பாக தொடக்க நிலை ஆய்வு செய்யப்படுதல் என்பதே இதன் முதல் படிநிலையாய் இருந்தது. அன்னா பல ஆண்டுகளுக்கு முன்பாகப் பிரதான ஆசாரியராய் இருந்தார், மற்றும் அவர் இன்னமும் சட்ட உரிமைப்படியான பிரதான ஆசாரியர் என்று யூதர்களால் மதிக்கப்பட்டார். அவர் வயது முதிர்ந் தவரும் மாபெரும் செல்வாக்குடையவருமாய் இருந்தார். அவர் இயேசு விடம் ஒரு சில கேள்விகளைக் கேட்ட பின்பு, கொடூரமான முதல் அறையானது அவர் முன்னிலையிலேயே அவரது (இயேசுவின்) முகத்தில் விழுந்த பிறகுதான், அவரை (இயேசுவை) காய்பாவினிடத்தில் அனுப் பினார்; (2) இரண்டாம் படிநிலையானது காய்பாவுக்கு முன்பாக இருந்தது, இது மிகவும் அதிகமான முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. காய்பா என்பவர் அன்னாவின் மருமகனாயிருந்தார் மற்றும் அவர் ஆலோசனை சங்கத்தின் அல்லது ஆலோசனைக் குழுவின் தலைவர் என்ற வகையில் உண்மையான பிரதான ஆசாரியராயிருந்தார். சூரிய உதயத்திற்கு முன்பு நடக்கும் ஆலோசனை சங்கத்தின் எந்தக் கூட்டமும் சட்ட விரோத மானதாயிருக்கும்; ஆனால் மக்கள் கலகம் விளைவிப்பதற்கு முன்பாக இயேசுவிற்குத் தண்டனைத் தீர்ப்பை நடைமுறையில் பெற்றுக் கொள்ள தலைவர்கள் துரிதமாயிருந்தார்கள் என்பது உறுதி. அறிவுக்குப் பொருத்த மான குற்றச்சாட்டைக் கட்டி அமைப்பது/வடிவமைப்பது மிகவும் கடினமானதாக இருந்தது, நகைப்புக்கிடமான பல குற்றச்சாட்டுகள் முன் கொண்டு வரப்பட்டன, ஆனால் சாட்சிகள் கருத்து வேறுபட்டனர், மற்றும் இயேசு மாண்புமிக்க வகையில் அமைதி காத்து நின்றார். வழக்குரைத்

தலானது இடிந்து விழக்கூடிய/கலைந்து போகக் கூடிய அபாயம் ஏற்பட்ட பொழுது, இயேசு தாமே குற்றத்தை மெய்ப்பிக்கச்செய்யும் வகையில் அவரிடத்தில் காய்பா, "நீ ஸ்தோத்திரிக்கப்பட்ட தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துதானா?"[2] என்று கேட்டார். இதற்கு முன் இயேசு அமைதியாய் இருந்திருந்தார். (ஆனால்) அந்தக் கேள்விக்கு அவர் அமைதியாய் இருக்க முடியாது போயிற்று, மற்றும் அவர், "நான் அவர்தான்"[3] என்று பதில் அளித்தார். "தேவதூஷணம்" என்று காய்பா சத்தமிட்டார். வெறுப்புணர்வு மிகுந்திருந்த நீதிபதிகள், "இவன் மரணத்திற்குப் பாத்திரனாயிருக்கிறான்"[4] என்று எதிரொலித்தனர். இது இயேசு கைது செய்யப்பட்ட பிறகு அந்த நள்ளிரவில் உடனடியாக நடந்திருக்க வேண்டும். சூரிய உதயத்திற்கு இன்னும் நேரம் இருந்தது, ஆலோசனை சங்கத்தின் முழுமையான கூட்டத்திற்கு முன்பிருந்த இடைவேளை நேரமானது எதிர்ப்புத் தெரிவிக்காத கைதியை ஏளனம் செய்வதில் செலவிடப்பட்டது. (3) ஏற்கனவே எடுக்கப்பட்ட முடிவை முறைப்படி முழு ஆலோசனை சங்கத்திற்கும் முன்பாக உறுதிப்படுத்துதல் என்பதே மூன்றாம் படிநிலையாக இருந்தது.

(இந்த) தொடக்கப் படிநிலைகளின்போது ஏதோ ஒரு வேளையில், பேதுருவின் வீழ்ச்சி நடந்தேறியது. இவர் தமது எஜமானருடன் அருகில் இருப்பதற்காக யோவானுடன் சேர்ந்து மறைவாய் வந்து, அங்கு நடந்தவற்றைக் கவனித்துக் கொண்டிருந்தார். அது ஆபத்து நிறைந்த களமாய் இருந்தது; மற்றும் பேதுரு தம்மை ஒருவர் பின் ஒருவராக கலிலேயன் என்று இகழ்ச்சியுடன் சுட்டிக்காட்டுகையில், கர்த்தரை அவர் மும்முறை மறுத்தலிப்பதற்கும், மறுதலிப்புகளுடன் ஆணையிடுதல்களைக் கூட்டிக் கொள்ளவும் கூட இணங்கினார். பாவம் பேதுரு! ஆனால் அவர் நம்பிக்கையற்ற வகையில் இழந்து போகப்படாதிருந்தார். மேட்டிமை நிறைந்த தமது சொந்த புகழ்ச்சியும், இயேசுவின் முன்னுரைத்தலும் நினைவுக்கு வரும் வகையில் சேவல் கூவியது, காய்பாவின் அரண்மனை முற்றத்திற்கு கடந்து சென்ற இயேசு அவ்வேளையில் அவரை (பேதுருவை) மௌனமாக நோக்கியது ஆகியவை அவருக்குள் இருந்த நற்பகுதியைத் தூண்டி எழுப்பின: "அவன் வெளியே போய் மனங் கசந்து அழுதான்."[5]

இன்னும் அதிக துக்கமும் இன்னும் அதிக பயங்கரமுமான பக்கக் காட்சி இன்னொன்று நடந்து கொண்டிருந்தது. யூதாஸூம் கூட, நடந்து கொண்டிருந்தவை எல்லாவற்றின் மீதும் கண்ணோக்கமாய் இருந்தான். இயேசு தம்முடைய கட்டுகளை முறித்துப் போட்டு தமது மகிமையை வெளிப்படுத்துவார் என்று அவன் நம்பியிருந்திருக்கலாம். தான் முப்பது சேக்கல்கள் அதிகம் கொண்ட செல்வந்தனாய் இருக்கும் அதே வேளையில், எஜமானர்மீது எந்தத் தீங்கும் விழாது. ஆனால் யூதத்துவ விசாரணையின் மூன்று படிநிலைகளும் முடிவுக்கு வந்தன. இயேசு மரணத்திற்குத் தீர்ப்பிடப்பட்டார். பிலாத்துவின் தீர்ப்பு மட்டுமே தேவையாய் இருக்கிறது. யூதாஸைக் கசப்புணர்வு மேற்கொள்ளுகின்றது. அந்த முப்பது வெள்ளிக் காசுகள் அவனது ஆத்துமாவிற்குள் எரிந்து கொண்டிருக்கின்றன. ஆலோசனைச் சங்கத்தாரின் முன் விரைந்து சென்ற அவன் அவற்றைக் கீழே வீசி எறிகின்றான், மற்றும் ''குற்றமில்லாத இரத்தத்தைக் காட்டிக்

கொடுத்தேனே”[6] என்று கூறுகின்றான். “எங்களுக்கென்ன, அது உன்பாடு” என்பது இருதயமற்ற பதிலாக உள்ளது. காட்டிக் கொடுப்பவன் எப்பொழுதுமே அவனைப் பயன்படுத்திக் கொள்பவர்களால் ஒரு கருவியாகவே பழித்துரைக்கப்படுகின்றான். அவன் வெளியே சென்று நான்று கொண்டு செத்தான் (இ.வ. மத். 27:5; அப். 1:18, 19). அவன் ஏன் ஓடிச் சென்று அப்பொழுதும் கூட இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து அவருடைய மன்னிப்பின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை? கசப்புணர்வு என்பது மனந்திரும்புதல் அல்ல. யூதாஸ் ஒன்றிற்காக நின்றான்; பேதுரு இன்னொன்றிற்காக நின்றார்.

ஆ. *ரோம அல்லது குடிமை விசாரணை.*—இங்கும் மூன்று படிநிலைகள் இருந்தன. (1) பிலாத்துவுக்கு முன்பாக. “(இவன் மேல் சாட்டப்பட்ட) குற்றம் என்ன?” என்பதே பிலாத்துவின் முதல் கேள்வியாய் இருந்தது. யூதர்கள் அவரை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கக் காரணமாயிருந்த அவர்களின் தேவதூஷணக் குற்றச்சாட்டானது ரோம நீதிமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படாது. முதலில் அவர்கள், அவர் தீமை செய்கின்றவர் என்ற தெளிவில்லாத குற்றச்சாட்டுகளின்மீது பிலாத்துவிடம் இருந்து தண்டனைக்கான தீர்ப்பைப் பெற்று விட நாடினார்கள்; ஆனால் நியாயம் வழங்குதலின் ரோமக் கருத்தறிவு கொண்ட பிலாத்து, திட்டவட்டமான குற்றச்சாட்டுகளைக் கேட்டு வற்புறுத்துகின்றார். “இவன் தன்னைக் கிறிஸ்து என்னப்பட்ட இராஜாவென்றும், இராயருக்கு வரி கொடுக்க வேண்டுவதில்லையென்றும் சொல்லி,”[7] இதில் இரண்டாவது குற்றச்சாட்டு பொய்யாக இருந்தது; மற்றும் இயேசு தமக்கு இராஜரீகம் எதையேனும் உரிமைகோரி, அரசியல் ரீதியான கருத்தமைவுகளில் அபாயம் எதையும் ஏற்படுத்தவில்லை என்பதில் பிலாத்து, விரைவிலேயே திருப்தியடைந்தார், மற்றும் குற்றமில்லாதவர் என்று அறிவித்தார். அவர்கள் அதை அவ்வாறு விட்டுவிடுபவர்களாய் இருக்கவில்லை, எனவே அவர் (இயேசு) கலிலேயாவிலிருந்து எருசலேம் வரையிலும் கலகத்தைத் தூண்டினார் என்ற நான்காவது குற்றத்தைச் சுமத்தினர். பிலாத்து சிக்கலான சூழ்நிலையில் இருந்தார். குற்றமறியாத ஒரு மனிதரை தீர்ப்பிட அவர் மனமில்லாதிருந்தார்; யூதர்களின் மனம் புண்படச் செய்வற்கு(ம்) அவர் பயப்பட்டார். ஆனால் கலிலேயன் என்ற வார்த்தையை அவர் பிடித்துக் கொண்டார். அது ஏரோது அரசனின் மாகாணமாயிருந்தது; ஏரோது (எருசலேம்) நகரில் (தான்) இருந்தார்; இந்த இரு ஆளுநர்களும் பகைமை கொண்டிருந்தனர்; இங்கு இது, ஏரோதுக்கு மரியாதை காண்பிக்கவும் பகைமையைக் குணமாக்கவும் ஒரு அரிய வாய்ப்பாகவும், அதே வேளையில் கருத்தொருமைப்படாத மற்றும் அபாயமான வழக்கிலிருந்து விலகிக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பாகவும் இருந்தது. எனவே பிலாத்து இயேசுவை ஏரோதிடம் அனுப்பி வைத்தார். (2) ஏரோதுக்கு முன்பாக. ஏரோது இயேசுவை சந்திக்க மிக ஆர்வமாகவும், அவர் மூலமாய் சில அற்புதங்கள் செய்யப்படுவதைக் காணும் நம்பிக்கையுடனும் இருந்தார். ஆனால் தம்முடைய சொந்த கொள்கையின்படி (மட்டும்) செயல்பட்ட இயேசு (அந்தப்) பன்றிக்கு முன்னால் முத்தை இரைக்கவில்லை, ஏரோதுவின் கேள்விகள் யாவற்றிற்

கும் அவர் ஒரு வார்த்தை கூடப் பதில் உரைக்கவில்லை. பிறகு இரண்டாவது கேலிக் கூத்து நடைபெற்றது. முற்றிலும் தோல்வியுற்ற ஏரோதுவும் அவரது மிருகத்தனமான படையணியும் இயேசுவுக்கு ஒரு கந்தலாடையை உடுத்துவித்துத் திரும்ப பிலாத்துவிடமே அனுப்பி வைத்தனர். (3) மீண்டும் பிலாத்துக்கு முன்பாக. ஏறக்குறைய இந்த வேளையில், மக்கள் கூட்டமானது பஸ்காவிற்கான வருடாந்திர தயவாக ஒரு கைதியை விடுவிக்கும்படி ஆராவாரமிடத் தொடங்கிற்று. உடனே பிலாத்து இயேசுவை முன்மொழிந்தார். ஆனால் ஆசாரியர்களோ மக்களிடத்தில் மும்முரமாய் வேலை செய்தனர். வெற்றி ஊர்வலத்தின் தலைவராக நகருக்குள் பயணித்திருந்த இயேசு, மற்றும் ஆலோசனை சங்கத்தினரால் தீர்ப்பிடப்பட்டு பிலாத்துவின் தண்டனைத் தீர்ப்புக்குக் காத்திருந்த இயேசுவும் இரண்டு நபர்களாய் இருந்தனர். “இவனையல்ல, பரபாசை விடுதலை பண்ண வேண்டும் ... ; அந்தப் பரபாசென்பவன் கள்ளனாயிருந்தான்.”[8] கூட்டத்தாரோடும், தன் மனச்சாட்சியோடும் சற்றே போராடிய பிலாத்து, பின்பு இயேசுவைச் சிலுவையில் அறைய உத்தரவு கொடுப்பதற்கு இணங்கினார். இதற்கு இடைநேரத்தில் பிலாத்துவின் போர் வீரர்கள் தங்கள் ஏளனத்தை சேர்க்கின்றனர், அவருக்குச் சிவப்பான அங்கியை உடுத்தவிட்டு, அவரது கையில் ஒரு கோலைக் கொடுத்து, அவரது தலையின்மீது ஒரு முரடான (முள்) கிரீடத்தை வைத்து அழுத்துகின்றனர்.

ஆறு மடங்கான விசாரணை இவ்விதமாய் முடிகின்றது, இதில் இயேசுவின் மிக மேன்மையான மனிதத்துவத்திற்கு என்றென்றைக்குமான எதிர்த்துவமாக சூழ்ச்சியும், மாய்மாலமும், கோழைத்தனமும், சுயநலக் கொள்கையும் பண்பற்ற மிருகத்தனமும் நிலைநிற்கின்றன. அங்கும் மற்றும் அதற்குப் பிறகும் கூட, கேலி செய்யும் பாணியில் அரச உடை உடுத்துவிக்கப்பட்டு, கூட்டத்தின் இகழ்ச்சிகள் மற்றும் அவமானங்களை நோக்கிக் கொண்டிருந்த அவ்வேளையிலும் கூட அவர், ஏரோதின் அரியணையில் அமர்ந்த எந்த ஒருவரைக் காட்டிலும், அல்லது செசரின் (இராயனின்) கிரீடத்தைத் தரித்து எந்த ஒருவரைக் காட்டிலும் நூறு மடங்கு அதிகப்படியான அரசராகவே இருந்தார்.

***3. சிலுவையில் அறைதல்.***—*அ. நேரமும் இடமும்.*—சிலுவையில் அறையும்படியான உத்தரவு, காலையில் ஏறக்குறைய ஒன்பது மணி அளவில் கொடுக்கப்பட்டது. இயேசு நகர வாசலுக்கு புறம்பே வெளியேற்றப்பட்டு (எபி. 13:12), எபிரெய மொழியில் கொல்கொதா என்றும் கிரேக்க மொழியில் கிரேனியன் என்றும், இலத்தீன் மொழியில் கல்வாரியம் (கல்வாரி) என்றும்—இவை யாவையும் மண்டை ஓடு என்று அர்த்தப் பட்டன—அழைக்கப்பட்ட இடத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டார். இது அநேகமாக, நகரத்தின் வடமேற்கில் இருந்த மண்டை ஓட்டின் வடிவம் கொண்ட ஒரு சிறு குன்றாக இருந்திருக்கலாம்.

*ஆ. வழியில்.*—இயேசு தமது சொந்த சிலுவையைத் தாமே சுமந்து சென்றார்; ஆனால் கொல்கொதாவை அடையும் முன்பே, காவலர்கள் சிரேனே ஊர் இளைஞன் ஒருவனைப் பிடித்து அவன்மீது சிலுவையைச் சுமத்தினார்கள்; இது ஒருவேளை, இரவு விழிப்புகளினாலும் காலையில்

ஏற்பட்ட துன்பங்களினாலும் வெறுமையாக்கப்பட்ட இயேசுவின் பலத்திற்கு அதன் (சிலுவையின்) எடையானது, மிகவும் பெரியதாய் இருந்ததால் நடந்திருக்கலாம். அந்த இருளான/எதிர்ப்பு நிறைந்த வேளை யிலும் கூட அவரது விதியை நினைத்து அழுது புலம்பும் சிலர் காணப் பட்டனர். அவமானத்தின் கீழ் அவ்வளவு நேரம் அமைதியாய் இருந்த அந்த உதடுகள் இப்பொழுது பரிதாபத்தினிமித்தம் திறக்கின்றன; (ஆனால்) அது அவருக்காக இல்லாமல், எருசலேமிற்கு விரைவில் நேரவிருக்கும் அழிவில் மூழ்கிப் போகப்போகின்றவர்களுக்கானதாக இருந்தது.

*இ. சிலுவையில்.*—இரு நெடுஞ்சாலை கள்வர்கள் அவருடன் கூடச் சிலுவையில் அறையப்பட்டனர். சிலுவையில் அறைதல் என்பது கீழ்த்தர மான குற்றவாளிகளுக்கு ரோமர்கள் தண்டனை நிறைவேற்றும் முறைமை யாக இருந்தது. எருசலேம் பெண்கள் (சிலர்) பரிதாபத்தினிமித்தம், அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளின் போது மதிமயக்கும் பானத்தைத் தயாரித்து கொண்டு வருவது வழக்கமாயிருந்தது. அப்படிப்பட்டதொரு பானம் இப்பொழுது வழங்கப்பட்டது; ஆனால் இயேசு தமது வலியைப் போக்குவதற்காகக் கூடத் தம் (உணர்வுத்) துறைகளை மூடிமறைக்க மறுத்து விட்டார்.

*ஈ. சிலுவையில் இருந்து ஏழு கூற்றுக்கள்.*—சிலுவையில் இருந்தவாறே இயேசு கூறியதாக ஏழு கூற்றுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன: (1) இவற்றில் முதலாவது கூற்று அநேகமாக இந்தக் கணத்தில் உரைக்கப் பட்டிருக்கலாம். உடல்கள் முதலில் சிலுவையில் வைத்து ஆணிகளால் அறையப்பட்டன, பின்பு சிலுவைகள் அவற்றின் துளைகளில் முரட்டுத் தனமாய்ச் செருகப்பட்டன. “பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே”;[9] இது (சிலுவையில் அறைந்த) சற்று நேரத்திலேயே இயேசுவின் மேல்அங்கியைக் குறித்து சீட்டுப்போட அமர்ந்த முரட்டுத்தனமான போர் வீரர்களைக் குறித் திருந்தது. குற்றம் சுமத்தப்பட்டவர்கள்மீது வைக்கப்படுவதற்குப் பிலாத்து பல குற்றச்சாட்டு(ப் பலகை)களைத் தயார் செய்திருந்தார். அவற்றில் இயேசுவைப் பற்றியதானது எபிரெயம், கிரேக்கம் மற்றும் இலத்தீன் மொழிகளில் பிலாத்துவால் அர்த்தப்படுத்தப்பட்டு, யூதர்களுக்குத் தங்கள் முகத்தில் அறைந்தது போல் உணரப்பட்டிருந்தது: “நசரேயனாகிய இயேசு, யூதருடைய இராஜா.”[10] அவர்கள் மறுத்தனர், ஆனால் அம்மறுப்பு எடுபட வில்லை. (2) இயேசுவின் தாயான மரியாளும் வேறு இரு மரியாள்களும் யோவானுடன் சிலுவையின் அருகில் நின்றனர். இயேசு தம் தாயிடத்திலும் யோவானிடத்திலும் தமது இரண்டாம் கூற்றை உரைத்தார்: “ஸ்திரீயே, அதோ, உன் மகன்; ... அதோ உன் தாய்”[11] இது தன் மீது காட்டிலும் பிறர் மீது சிந்தனையாய் இருப்பதை உணர்த்திற்று. (3) இப்பொழுது, பலவீனங் கள் (அவரிடம்) இருக்கையில் (கூட) பலம் நிறைந்தவர்களின் நோய்ப் படுத்தும் காட்சி தொடங்குகின்றது. பிரதான ஆசாரியர்களும், வேதபாரகர் களும், அதிகாரிகளும், நாட்டின் தலைவர்களும் எப்பொழுதும் ஒன்று கூடும் அப்படிப்பட்ட காட்சியில் கூட்டமாய் ஏளனப் பார்வைகளில் சேர்ந்து கொண்டனர். “மற்றவர்களை இரட்சித்தான்; தன்னைத்தானே இரட்சித்துக்

கொள்ளத் திராணியில்லை"[12] (இது) அவர்கள் கனவு கண்டிருந்ததைக் காட்டிலும் ஆழமான சத்தியமாயிருந்தது: ஏனெனில், அவர் மற்றவர்களை இரட்சிப்பாரென்றால், தம்மைத்தாமே அவர் எவ்வாறு இரட்சித்துக் கொள்ள முடியும்? சிலுவையில் தொங்கிய பரிதபிக்கப்படத்தக்க கள்வர்களும்கூட இந்த நிபந்தனையில் இணைந்து கொண்டார்கள்; முதலில் இருவரும் ஏளனம் செய்தனர் பின்பு அவ்விருவரில் ஒருவன், குற்றம் அறியாதவர் துன்புறுவதினால் பரிதபித்து, மனந்திரும்பி, "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்"[13] என்று ஜெபத்துடன் மையச் சிலுவையை நோக்கித் திரும்பினான். தம்முடைய பெயருக்கும் ஊழியத்திற்கும் கடைசி வரையிலும் உண்மையாக இருந்த இயேசு சிலுவையிலிருந்து மூன்றாம் கூற்றை உரைக்கின்றார், "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய்."[14] (4) பிறகு பன்னிரண்டு மணியிலிருந்து மூன்று மணி வரையிலும் இருளும் அமைதியுமான மணிகள் பின் தொடர்ந்தன. அந்திப் பலி வேளையின் நேரம் நெருங்கிற்று, இருளிலிருந்தும் சிலுவையிலிருந்தும் அந்தப் பொறுமையான உதடுகளினின்று முதலும் கடைசியுமான முறையீடு பரலோகத்தை நோக்கி மேல் எழும்பிச் சென்றது, அது வியப்புக்குரிய/பொருள் விளங்காத வார்த்தைகளாய் உள்ளது, "என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கை விட்டீர்?"[15] விரைவிலேயே அங்கு எஞ்சியுள்ள கூற்றுக்கள் பின் தொடருகின்றன: (5) "தாகமாயிருக்கிறேன்"[16] இது உடல்ரீதியான வேதனையின் முதலும் கடைசியுமான வெளிப்பாடாக உள்ளது. பயபக்தியானது கடின இருதயங்களை மென்மையாக்கிற்று, இயேசு ஒரு பாத்திரம் அளவுக்கு குளிர்ச்சிப் படுத்தும் காடியை பெற்றுக் கொள்கின்றார். மீண்டும் ஒரு தரம் அவர் பேசுகின்றார்: (6) "முடிந்தது"[17]; முடிந்தது என்பது வெறுமனே முடிந்து போனதல்ல, இப்பூமியில் வாழ்ந்த எல்லாவற்றிலும் மிகவும் மாண்பு கொண்ட வாழ்வு முடிந்து போயிற்று; முடிந்தது, மனித மீட்புக்கான ஊழியம் முடிந்து போயிற்று; முடிந்தது, நிறைவேற்றப்பட்டது, முற்பிதாக்களும் தீர்க்கதரிசிகளும் கனவு கண்டிருந்த அதன் கருத்துணர்வைக் காட்டிலும் மிக மிக மேன்மையான ஒன்று, மாதிரிகளும், அடையாளங்களும் மற்றும் பழைய உடன்படிக்கையின் தீர்க்கதரிசனங்களும் முடிந்து போயிற்று. (7) பிறகு இயேசு சிலுவையின் மீது தம் ஏழாம் மற்றும் கடைசிக்கூற்றுடன் தலை சாய்த்துத் தம் ஆவியை ஒப்புக்கொடுத்தார்: "பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்."[18]

*உ. பழைய உடன்படிக்கையின் முடிவு.*—அவரது மரணக் கதறுதலின் வேளையில், ஒரு பூமியதிர்ச்சியினால் நிலமானது அதிர்ந்தது. தேவாலயத்தின் திரைச் சீலை மேலிருந்து கீழாக இரண்டாய்க் கிழிந்தது; ஏனெனில் இயேசுவின் சிலுவையானது, பழைய ஏற்பாடு தனது மாதிரிகளுடனும், நிழல்களுடனும் முடிவுக்கு வருவதை அடையாளப்படுத்திற்று (கொலோ. 2:14). மனிதர்கள் பயபக்தி நிரம்பப் பெற்றார்கள். ரோம நூற்றுக்கு அதிபதிகூட, "மெய்யாகவே இவர் தேவகுமாரன்தான்"[19] என்று கூறும் நிலைக்கு வந்தார்.

**4. அடக்கம்.**—சிலுவையில் அறையப்பட்டதைத் தொடர்ந்து வந்த

*அடுத்த நாள் பெரிய ஓய்வு நாளாயிருந்தது. யூதர்கள் கொலை செய்ய முடிந்திருந்தது; ஆனால் அவர்கள் ஓய்வு நாளைச் சடங்காச்சார வகையில் தீட்டுப்படுத்த முடியாதிருந்தது; சூரியன் மறைந்த பின்பு உடல்கள் சிலுவைகளில் தொங்கிக் கொண்டிருக்கக் கூடாது. (எனவே சிலுவையில் தொங்கியவர்களின்) மரணத்தை விரைவு படுத்துவகற்காக அவர்களின் கால்கள் முறிக்கப்பட்டன; ஆனால் ஒரு படைவீரன் அவருடைய மார்பில் ஈட்டியால் குத்தியதைத் தொடர்ந்து வெளிப்பட்ட இரத்தமும் தண்ணீரும் காண்பித்த வகையில், அவர் ஏற்கனவே இறந்து போயிருந்தார். இவ்விதமாக இரண்டு தீர்க்கதரிசனங்கள் அறியாமலேயே நிறைவேற்றப்பட்டன (சங். 34:20; 22:16, 17). இயேசுவின் சீஷர்களில் இருவரான அரிமத்தியா யோசேப்பு மற்றும் நிக்கொதேமு ஆகியோரிடத்தில் அவரது சரீரம் ஒப்புவிக்கப்பட்டது; யோசேப்பின் புதுக் கல்லறையில் அச்சரீரத்தை அடக்கம் செய்ய அன்புமிக்க கரங்கள் ஆயத்தப் பணி செய்தன; மற்றும், இன்னும் பயம் நிறைந்த யூதர்களின் வேண்டுகோளுக்கிணங்கி கல்லறையின் மீது ரோம முத்திரை வைக்கப்பட்டு, அதைப் பலமாய்க் காவல் செய்ய ரோமச் சேவகர்கள் நியமிக்கப்பட்டார்கள்.*

குறிப்புகள்

*[1]மத். 26:49; மேலும் மாற். 14:45; லூக். 22:47ஐயும் காணவும். [2]மாற். 14:61; மேலும் மத். 26:63; லூக். 22:67ஐயும் காணவும். [3]மாற். 14:62; மேலும் மத். 26:64ஐயும் காணவும். [4]மத். 26:66; மேலும் மாற். 14:64ஐயும் காணவும். [5]மத். 26:75. [6]மத். 27:4. [7]லூக். 23:2. [8]யோவா. 18:40; மேலும் மத். 27:20; மாற். 15:11; லூக். 23:18ஐயும் காணவும். [9]லூக். 23:34. [10]யோவா. 19:19; மேலும் மத். 27:37; மாற். 15:26; லூக். 23:38ஐயும் காணவும்.*

*[11]யோவா. 19:26, 27. [12]மத். 27:42; மாற். 15:31; லூக். 23:35. [13]லூக். 23:42. [14]லூக். 23:43. [15]மத். 27:46; மாற். 14:34. [16]யோவா. 19:28. [17]யோவா. 19:30. [18]லூக். 23:46. [19]மத். 27:54; மாற். 15:39.*